**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா. **20**
**Defence**
**Court**

Name : கோகிலா

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 17.03.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசி மின்நகரில் குடியிருக்கிறேன். இதற்கு முன்னதாக மலையான் கோவில் தெருவில் குடியிருந்தேன். என் கணவர் பெயர் சுரேஷ். தென்காசி பரதன் தியேட்டர் அருகில் என் கணவர் கம்ப்யூட்டர் சென்டர் நடத்தி வந்தார். இறந்து போன குமார்பாண்டியன் எனது தாய்மாமன். அவர் இந்து முன்னனி தென்காசி நகர் தலைவராக இருந்து வந்தார். 17.12.2006 ம் தேதி குமார்பாண்டியனை தென்காசியில் கொலை செய்து விட்டார்கள். கோவில் நிலத்திற்காக பிரச்சனை ஏற்பட்டு அதில் கொலை செய்யப்பட்டதாக கேள்விபட்டேன். என் கணவர் 14.8.2007 ம் தேதி வெட்டி கொலை செய்யப்பட்டு இறந்து போனார் அவருடன் இரண்டு மாமா 1) சேகர் மற்றும் 2) செந்தில்

இருந்தார்கள். சேகரும், செந்திலும் இறந்து போனார்கள். தென்காசி கூளக்கடை பஜார் எல்.ஆர்.எஸ் பாளையத்தில் மூவரும் வெட்டப்பட்டு இறந்து போனார்கள் என்று கேள்விபட்டேன். செந்தில் மட்டும் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டு திருநெல்வேலியில் இறந்து போனார். சேகருக்கு சுரேஷ் தம்பியாவர் அவரது தம்பி செந்தில் ஆவார். நான் சம்பவம் கேள்விபட்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் அங்கு என் கணவரையும் அவரது சகோதரர்கள் இருவரையும் அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் கணவரும் அவரது சகோதரர்களும் இறந்த விவரம் நான் கேள்விபட்டது தான் எனக்கு நேரில் தெரியாது. சம்பவத்தினத்தன்று போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என் கணவர் இறப்பதற்கு ஓராண்டிற்கு முன்பேயிருந்தே நானும் என் கணவரும் பிரிந்து வாழ்ந்து வந்தோம்.